14.03.2025 S.C.No.138 of 2017 P.W. 11 - Munirajulu

(A4 and A6 absent and their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A1 to A3, A5 present)

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.36 P.M.

மேற்படி சாட்சியின் தாய்மொழி தெலுங்கு என்பதால் ஏற்கனவே அந்த சாட்சி முதல் விசாரணை பதிந்தபோது அவரது வாக்குமூலத்தை திரு.அமரேந்திரன் தெலுங்கு மொழி ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, சேர்க்காடு, வேலூர் மாவட்டம் அவர்களால் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டு பதியப்பட்ட நிலையில் இன்றும் அதே திரு. அமரேந்திரன் அவர்கள் மூலம் சாட்சியிடம் கேட்கப்படும் கேள்விகளை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தமிழில் எடுத்துரைத்து அதை சாட்சிக்கு தெலுங்கில் மொழி மாற்றம் செய்து சொல்லி சாட்சி பதில் அளித்ததை அதே தெலுங்கு ஆசிரியர் தமிழில் சொன்னதை கீழ்க்கண்டவாறு பதியப்பட்டது.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: 18.06.2015 இரவு 09.00 மணிக்கு தாங்களும் தங்களுக்கு தெரிந்த சத்யாவும் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்தீர்கள் அங்குதான் உங்கள் மைத்துனர் சிவா என்கிற சிவச்சங்கரன் இருந்தார் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: 18.06.2015 அன்று தாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்தபோது அங்கு மேலும் மூன்று பொதுஜனங்கள் இருந்தார்கள் என்றால் ?

பதில்: சிவாவும் வேறு ஒருவரும் இருந்தார்கள். அவர் யார் என்று எனக்கு தெரியாது.

கேள்வி: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்த மற்றொரு நபர் நல்ல முறையில்தான் இருந்தார் என்றால் ?

பதில்: தூரத்தில் இருந்தார். அதனால் எனக்கு சரியாக தெரியாது.

கேள்வி: அதனால் அந்த தூரத்தில் இருந்த நபர் யார் என்று என்னால் அடையாளம் காட்ட முடியாது என்றால்?

பதில்: சரிதான்.

கேள்வி: வழக்கில் உள்ள எதிரிகள் எவரும் அந்த நேரத்தில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இல்லை என்றால் ?

பதில்: சரிதான். எவறுமில்லை.

கேள்வி: தாங்கள் தங்களின் மைத்துனரை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து எழுதிக்கொடுத்துவிட்டு அழைத்து சென்றீர்கள் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் தங்கியிருந்த காவலர் ஒருவரால்தான் (அ.த.சா.ஆ.17) தாங்கள் கையொப்பமிட்ட ஆவணம் எழுதப்பட்டது என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: கடந்த முறை இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சொன்னபோது சிபிசிஐடி போலீசார்கள் சொல்லிக்கொடுத்ததைத்தான் சொன்னீர்கள் என்றால் ?

பதில்: சரிதான். அவர்கள் சொன்னதுபோல் சொன்னால் மீண்டும் வர வேண்டாம் என்று சொன்னார்கள்.

**2 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மதியம் 02.53 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.14 17:29:36 +0530

14.03.2025 S.C.No.138 of 2017 P.W. 12 - Pavithra

(A4 and A6 absent and their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A1 to A3, A5 present)

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.55 P.M.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் எந்தவித குறுக்கு விசாரணையும் இல்லை.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மதியம் 02.57 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.14 17:29:45 +0530